
மத்தியமாகாணக் கல்வித் திணைக்களம்
கண்டி
புலமைப்பரிசில் பரீட்சை- 2020
பயிற்சி வினாப்பத்திரம் இலக்கம் 05

பகுதி 1 நேரம் 45 நிமிடம்


❖ ஒவ்வொரு வினாவிற்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுங்கள்.

- **தரப்பட்டுள்ள சொற்சோடிகளுக்கு பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.**


1. தேசிய விளையாட்டு - ஆறு பேர்



1.  2.  3. 


2. விவசாயம் - உழவுத்தொழில்




1.  2.  3. 

- **அடுத்து வரும் உருக்களை தெரிவு செய்க.**

3. 

1.  2.  3. 

4. 

1.  2.  3. 

www.ikeou.lk

5. A, B இடைவெளிகளுக்கு வரவேண்டிய பொருத்தமான எண்களைத் தெரிவு செய்க.

3	2	A	6
1	B	5	15
2	4	1	8
6	24	5	

1) 3, 1 2) 3, 2 3) 1, 3

6.

2	3	5	6	8	9	11	A	B

1) 15, 13 2) 12, 15 3) 12, 14

7. சிவாவின் வீட்டிற்கு அவரது பாடசாலை நண்பர்கள் 15 பேர் வந்தனர். அனைவரும் குளிர்பானம் அருந்த முடிவு செய்தனர். ஒரு குளிர்பான போத்தலில் மூன்று பேர் குளிர்பானம் அருந்தலாம் எனின் அங்கு வாங்கப்பட்ட குளிர்பான போத்தல்களின் எண்ணிக்கை யாது?

1) 5 2) 4 3) 6

8. தீபாவளி திருநாளுக்கு 6 நண்பர்கள் தனது கையடக்க தொலைபேசியை பயன்படுத்தி தம்மிடையே குறுந்தகவல்களை (SMS) மாறி மாறி அனுப்பிக்கொண்டனர். அங்கு அனுப்பப்பட்ட குறுந்தகவல்களின் (SMS) எண்ணிக்கை யாது?

1) 36 2) 30 3) 28

9. ஒரு பிறந்த நாள் விழாவில் 8 நண்பர்கள் சந்தித்து தமக்கிடையே கைகளை குழுக்கிக் கொண்டனர். அங்கு இடம்பெற்ற கைக்குழுக்கள் எத்தனை?

1) 28 2) 56 3) 54

10. குயவன் - மண் எனின் நெசவாளி……..

1. உடை 2. நூல் 3. கைராட்டினம்

11. மாட்டு - வண்டிக்கு மாடு போல மோட்டார் வாகனத்திற்கு

1. சக்கரம் 2. பெற்றோல் 3. இயந்திரம்

12. பிரபு கடைக்குச் சென்று 15 சிவப்பு நிற பந்துகளையும் அதனை விட 7 கூடுதலான நீல நிறப் பந்துகளையும் அதனை விட 5 குறைவான மஞ்சள் நிறப் பந்துகளையும் வாங்கினான் எனின் பிரபு வாங்கிய மொத்த பந்துகளின் எண்ணிக்கை யாது?

1) 27 2) 54 3) 17

www.ikedu.lk

13. 2016 ஆம் ஆண்டு ஜனவரி 2 ஆம் திகதி புதன்கிழமை எனின் 2017ஆம் ஆண்டு ஜனவரி 2ஆம் திகதி என்னக் கிழமை?

1. வியாழக்கிழமை 2. புதன்கிழமை 3. வெள்ளிக்கிழமை

14. 2020 ஆண்டு ஜனவரி 20ஆம் திகதிக்கும் மார்ச் 20ஆம் திகதிக்கும் இடையிலான நாட்களின் எண்ணிக்கை யாது?

1) 60 2) 58 3) 59

15. 1 தொடக்கம் 100 வரை எண்களை எழுதும் போது பூச்சியம் எழுதப்படும் தடவைகளின் எண்ணிக்கை யாது?


1) 11 2) 10 3) 12

16. ராமனின் மகன் ரமணன், யசோதாவின் தாய் விமலா, ரமணனின் தாய் யசோதா எனின் விமாலாவுக்கும் ரமணனுக்குமான உறவு முறை

1. பாட்டி – பேரன் 2. தாய் - மகள் 3. மாமி – மருமகன்

17. ரூபா 375 இற்கு KTM எனவும் , ரூபா 640 இற்கு ACD எனவும் ஆங்கில எழுத்துக்களை பயன்படுத்தப்பட்டுள்ளது. இதற்கேற்ப ரூபா 7630 ஐ குறிப்பிடும் விதம் யாது?

1. TADP 2. TAKD 3. KATD

18.  இவ் உருவில் உள்ள முகங்களின் எண்ணிக்கை யாது?

1) 7 2) 8 3) 6

19. 5, 4, 2 ஆகிய இலக்கங்களை பயன்படுத்தி உருவாக்க கூடிய எண்களின் கூட்டுத் தொகை யாது?

1) 2440 2) 2542 3) 2442

20. பேனை ஒன்றின் விலை ரூபா 9, பென்சில் ஒன்றின் விலை ரூபா 6 ஆகும். நான்கு பேனையை வாங்கும் விலைக்கு எத்தனை பென்சில்கள் வாங்கலாம்?

1) 4 2) 6 3) 8


21. எப்பொழுதும் இடம் பெறக் கூடியது.

1. சூரியன் கிழக்கில் உதித்து மேற்கில் மறையும்
2. காற்று வேகமாக வீசுதல்
3. மழை கடுமையாக பெய்தல்

www.lkedu.lk

22. மழை பெய்தால் உடனே நிகழக் கூடியது.


1. வெள்ளப் பெருக்கு ஏற்படல்
2. சூழல் குளிர்ச்சியாக காணப்படல்
3. நிலம் நனைதல்

23. 

அருகில் தரப்பட்டுள்ள சதுரமுகிக்கு சுற்றி நிறந்தீட்டப்பட்டுள்ளது. புள்ளிக்கோடுகளின் வழியே வெட்டப்பட்டது. எனின் நிறந்ததீட்டாத பகுதிகளின் எண்ணிக்கை யாது?

1) 12 2) 8 3) 10

24. மீனா பாடசாலையில் இருந்து வீட்டிற்கு சென்ற பாதை வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது. மீனா பாடசாலையில் இருந்து வீட்டிற்கு செல்லும் போது எத்தனை தடவை கிழக்கு திசைப் பக்கம் சென்றுள்ளார்.



1) 5 2) 8 3) 7

25. சதுர வடிவான காணி ஒன்றில் சம எண்ணிக்கையான தூண்கள் நடப்பட்டுள்ளன. ஒரு பக்கம் இருந்து பார்க்கும் போது 12 தூண்கள் தெரிகின்றன. அங்கு நடப்பட்டுள்ள தூண்களின் எண்ணிக்கை யாது?

1) 44 2) 48 3) 46

26. உரோம எண் 4 எழுதுவதற்கு 3 தீக்குச்சிகளும் 7 ஐ எழுதுவதற்கு 4 தீக்குச்சிகளும் பயன்படுத்தப்பட்டன. இலக்கம் 14 எழுதுவதற்கு தேவைப்படும் தீக்குச்சிகளின் எண்ணிக்கை யாது?

1) 6 2) 4 3) 5

- **தரப்பட்டுள்ள மரபுத் தொடருக்குப் பொருத்தமான கருத்தினைத் தெரிவு செய்க.**


27. கீரியும் பாம்பும் போல ,

1) ஒருவருக்கொருவர் நன்றாகப் பழகுதல்.
2) இருவருக்குள் இருக்கும் பகை.
3) ஒன்றாக சேர்தல்.

28. மரத்தில் இருந்து விழுந்தவனை மாடு முட்டியது போல ,

1) வறுமைக்கு மேல் வறுமை
2) துன்பமும் இன்பமும்
3) துன்பத்தில் மேல் துன்பம்


29. .



இத் தொடர்பில் C எழுத்தால் காட்டப்படும் இடத்திற்கு பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.

1) ஊண் உண்ணி
2) தாவர உண்ணி
3) அனைத்தும் உண்ணி

www.ikedu.lk


30. 

இச் செவ்வக பெட்டியினுள் அதிகமாக காணப்படுவது

1. தள வடிவங்கள் 2. திண்ம உருக்கள் 3. எழுத்துக்கள்

31. கிரிக்கெட் போட்டியில் மைதானத்தில் காணப்படுபவர்களின் எண்ணிக்கை


1) 11 2) 13 3) 15

32. 

அருகில் உள்ள உருவில் காணப்படும் முக்கோணிகளின் எண்ணிக்கை யாது.

1) 8 2) 20 3) 21

- **பின்வரும் உருக்களை அவதானித்து பெறுமதிகளைக் காண்க.**



33 உரு  இன் பெறுமதி யாது?

1) 4 2) 5 3) 3

34. இலக்கம் 6 குறித்து நிற்கும் உரு யாது?

1.  2.  3. 

35. கிரிஸ் மரம் ஒன்றின் உயரம் 13m ஆகும். அம்மரத்தின் உச்சியில் நடப்பட்டுள்ள கொடியை ஒருவர் எடுப்பதற்கு மரத்தில் ஏறுகின்றார். ஒரு தடவை 3m ஏறும் போது 1m சறுக்குகின்றார் எனின் அவர் எத்தனையாவது தடவை மரத்தின் உச்சியில் உள்ள கொடியை எடுத்து இருப்பார்.

1) 6 2) 7 3) 12

36. பாதையை குறுக்காக கடக்கும் சரியான முறை யாது

1. வலது புறம், இடது புறம், வலது புறம் பார்த்த பின்பு கடக்க வேண்டும்
2. இடது புறம், வலது புறம், இடது புறம் பார்த்த பின்பு கடக்க வேண்டும்
3. வலது புறம், இடது புறம், வலது புறம் பார்த்து வாகனம் வராத போது கடக்க வேண்டும்

37. கீழ் வரும் கூற்றுக்களில் அறிவுத்தலை தெரிவு செய்க

1. இடி, மின்னல் ஏற்படும் சந்தர்ப்பங்களில் கைப்பேசியைப் பயன்படுத்த வேண்டாம்.
2. கண்ட இடங்களில் குப்பைகளை இடுவதைத் தவிர்க்கவும்.
3. பேருந்தில் பயணச்சீட்டின்றிப் பயணிப்பது தண்டனைக்குரிய குற்றமாகும்.

38. வாழைக்கு இலை போல நெல்லுக்கு

1. மணி 2. இலை 3. தாள்

39. 2m நீளமும் 2m அகலமும் உள்ள சுவருக்கு வர்ணம் பூச 2 லீற்றர் வர்ணப் பூச்சு தேவை எனின். 4m நீளமும் 1m அகலமும் உள்ள சுவருக்கு வர்ணப் பூச்சு எத்தனை லீற்றர் தேவைப்படும்.

1. 2லீற்றர் 2) 4லீற்றர் 3) 1 லீற்றர்

40. 3 பேர் 4 நாட்களில் செய்யக்கூடிய வேலையை 6 பேர் எத்தனை நாட்களில் செய்து முடிப்பர்.

1) 3 நாட்கள் 2) 2 நாட்கள் 3) 4 நாட்கள்

www.ikedu.lk